# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (24.1.0.2015 முதல் 28.10.2015)

**அறிக்கை எண் 83/2015** **தேதி: 23.10.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 34°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 28°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 22°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 9°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர்(24.10.2015 முதல் 28.10.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 முதல் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10கி.மீ முதல் 12கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 24.10.15 | 0 | 33 | 23 | 6 | 75 | 55 | 10 | வடகிழக்கு |
| 25.10.15 | 0 | 33 | 23 | 6 | 76 | 56 | 10 | வடகிழக்கு |
| 26.10.15 | 0 | 33 | 23 | 6 | 77 | 57 | 10 | வடகிழக்கு |
| 27.10.15 | 0 | 33 | 23 | 6 | 78 | 58 | 10 | வடகிழக்கு |
| 28.10.15 | 0 | 34 | 23 | 6 | 82 | 65 | 12 | வடகிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வறண்ட வானிலை மற்றும் அதிகரித்துள்ள வெப்பநிலை காரணமாக நடவு செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரில் இலைச் சுருட்டுப்புழு பரவலாக தென்படுகிறது. எனவே தழைச்சத்தை மேலுரமாக இடுவதை தவிர்க்கவும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் 1 கிலோ என்ற விகிதத்தில் 500 லிட்டர் நீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தவும்.
- ✓ தற்போதைய வறண்ட வானிலை காரணமாக இறவை கம்போடியா பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் காணப்படுவதால் ஒரு எக்டருக்கு இமிடாகுளோர்பிரிட் 100 மில்லி அல்லது வேப்பெண்ணெய் 3 சதவீத கரைசலை 15 நாள் இடைவெளியில் ஒரு முறை தெளிக்கவும்.
- ✓ பகல் நேர மற்றும் இரவு நேர வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்புள்ளதால், இறவை மஞ்சள் பயிரில் இலைப்பேன் தென்பட வாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்த டைமீத்தோவேட் 30 EC அல்லது மீத்தைல் டெமட்டான் 25 EC என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மில்லி கலந்து தெளிக்கவும்.
- ✓ புதிதாக முளைத்த புற்களில் கால்நடைகளை மேயவிடாமல் தடுத்து பாக்டீரியா நோய்களிலிருந்து காக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ வறண்ட வானிலை மற்றும் அதிகரித்துள்ள வெப்பநிலை காரணமாக நடவு செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரில் இலைச் சுருட்டுப்புழு பரவலாக தென்படுகிறது. எனவே தழைச்சத்தை மேலுரமாக இடுவதை தவிர்க்கவும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் 1 கிலோ என்ற விகிதத்தில் 500 லிட்டர் நீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**